# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# ஒரு அழகான முட்டாள் இராஜா

எழுதியவர்: Edward Hughes
சித்தரிப்பவர்: Janie Forest; Alastair Paterson
தழுவியவர்: Lyn Doerksen
மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj
உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

BFC
PO Box 3
Winnipeg, MB R3C 2G1
Canada

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி
உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

இஸ்ரவேலின் நியாயாதிபதியும், தலைவனுமான சாமுவேல் இப்போது முதிர் வயதுள்ளவனானான். அவன் அவனுடைய குமாரர்களை, தன்னுடைய இடத்தில் தேவனை சேவிக்கும்படி நியாயாதிபதியாக நியமித்தான்.
ஆனால் சாமுவேலின் குமாரர்களோ துன்மார்க்கராயிருந்தார்கள். அவர்கள் பணத்தை விரும்பி, தங்களின் பதவியை நேர்மையற்ற



முறையிலே உபயோகப்படுத்தி சம்பாதித்தார்கள்.

சாமுவேலின் குமாரர்களின் துன்மார்க்கத்தால்
இஸ்ரவேலர் துன்புற்றார்கள். நீதிமன்றங்கள்
நியாயமற்றதாயிருந்தது. ஜனங்களுக்கு உதவி
தேவைப் பட்டபோதெல்லாம் அவர்கள் சாமுவேலின்



ஏதாவது நடந்தே ஆக வேண்டும். ஒரு நாள் இஸ்ரவேலின் மூப்பர்கள் ஒன்றுகூடி சாமுவேலிடம் உதவி கேட்டார்கள்.



"எங்களை நியாயந்தீர்க்க ஒரு ராஜாவைத் தாரும்" என்று மூப்பர்கள் வேண்டினார்கள். அவர்களை துன்மார்க்கமான சாமுவேலின் பிள்ளைகள் நியாயந்தீர்க்க விரும்பவில்லை. தங்களை சுற்றி உள்ள மற்ற எல்லா தேசங்களைப் போல் தங்களுக்கும் ராஜா வேண்டுமென்றார்கள்.



சாமுவேல் கோபப்பட்டான். இஸ்ரவேலுக்கு ஏற்கனவே ஒரு ராஜா இருந்தான்! தேவன் வல்லமையுள்ளவர், நித்தியமானவர், இஸ்ரவேலை அரசாட்சி செய்தார். நீண்ட நாட்களுக்கு முன், செங்கடலைத் திறந்து, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுதலை பண்ணியிருந்தார்.



பின்பு இஸ்ரவேலுக்கு
அழகான தேசத்தை
கொடுத்தார்.

சாமுவேல் வேண்டுதல் செய்தபோது, தேவன் சொன்னார், "அவர்கள் உன்னையல்ல, நான் அவர்களை ஆட்சி செய்யாதபடி என்னை நிராகரித்து விட்டார்கள். அவர்கள் வேறே தேவர்களை வழிப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு செவிகொடுத்து ஒரு ராஜாவை அவர்களுக்கு ஏற்படுத்து."





உங்கள் பூலோக ராஜா உங்கள் பணங்களை வரியாக எடுத்துக் கொள்ளுவான், அவர்களின் சிறந்த வயல்களையும், திராட்ச தோட்டங்களையும் தனக்கு உதவ எடுத்துக் கொள்ளுவான்; ...



... அவர்கள் குமாரர்களை
படைக்கு
எடுப்பான்; மற்றும்
அவர்களுடைய
குமாரத்திகளை
தன்னுடைய
வேலைக்கு
வைத்துக்கொள்ளுவான்
என்று தேவன்
சாமுவேலை
கொண்டு
ஜனங்களை
எச்சரிக்க
சொன்னார்.

ஆனால் ஜனங்கள் எப்படியும் ராஜா வேண்டுமென்றார்கள்.





தேவன் சாமுவேலை ஒரு இளமையான வாலிபனிடத்தில் நடத்தினார். அவன் மிகுந்த அழகும், மிகவும் உயரமானவனாய் இருந்தான். அவன் மற்றெல்லாரையும் விட தலைக்கு மேல் உயரமானவனாயிருந்தான். அவன் பெயர் சவுல். சாமுவேல் சவுலை பார்த்த போது தேவன் சொன்னார், "இவன் என் ஜனத்தை ஆளுகை செய்வான்," என்றார்.



கீழ்ப்படிந்தவனாய், சாமுவேல் சவுலை இஸ்ரவேல் மேல் அபிஷேகம் பண்ணினான். அவன் சவுலை இஸ்ரவேல் ஜனங்களுக்கு காண்பித்த போது, அவர்கள் "ராஜா நீண்ட நாட்கள் இருப்பாராக" என்று ஆர்ப்பரித்தார்கள்.

உடனே சவுல் ராஜா சோதிக்கப்பட்டான். அம்மோனியர்கள் இஸ்ரவேலை வெறுத்தவர்கள், இஸ்ரவேல் பட்டணங்களை சூழ்ந்து கொண்டு ஒவ்வொரு மனிதனுடைய வலது கண்ணை பிடுங்கி போடப்போவதாக பயமுறுத்தினார்கள். எவ்வளவு



இந்த பயமுறுத்தும் செய்தி இராஜாவாகிய சவுலை எட்டியது. அவன் தன்னுடைய படையை ஏற்பாடு பண்ணினான்.





இரண்டு
படைகளும் சந்தித்த
போது, சவுல்
அம்மோனியர்களை
அழித்து,
பட்டணத்தை
காப்பாற்றினான்.
சவுல் ராஜா
தேவனுக்கு
மகிமையை
கொடுத்து
சொன்னது, "இன்று
கர்த்தர்
இஸ்ரவேலுக்கு
இரட்சிப்பை
அருளினார்."

தேவன் அந்த நாளிலே சவுலுக்கு பெரிய வெற்றியை கொடுத்தார். ஆனால் சவுல் எப்போதும் தேவனை கனம் பண்ணவில்லை. ஒரு நாள் பெலிஸ்தியரிடம் சண்டையிடும் முன்னர், சவுல் தேவனுக்கு ஒரு பலி செலுத்தினான்.



அது சாமுவேலின் வேலையென்று அவனுக்கு தெரியும்.  சாமுவேல் வரும்வரை தேவன் தன்னை காத்திருக்க சொல்லுகிறார் என்றும் தெரியும்.

ஆனால் சவுல் தேவனுக்கு கீழ்ப்படியவில்லை.



சாமுவேல் வந்தபோது, அவன் சவுலைப் பார்த்து, "புத்தியீனமாக செய்தீர், உம்முடைய தேவனின் கற்பனைகளை நீர் கைக்கொள்ளவில்லை. இப்போதும் உம்முடைய ராஜ்ஜியம் தொடருவதில்லை."



இது ஒரு சிறிய பாவம் என்று சவுல் ஒருவேளை நினைத்திருக்கலாம். ஆனால் தேவனுக்கு கீழ்ப்படியாமலிருப்பது எப்போதுமே அபாயமானது.



மற்றொரு முறை, தேவன் சவுலைப் பார்த்து துன்மார்க்க ஜனங்களான அமலேக்கியரை அழிக்க சொன்னார்.

ஆனால் சவுலும் அவனுடைய ஜனங்களும் அமலேக்கின் ராஜாவாகிய ஆகாக்கை



விட்டுவிட்டார்கள்.

மற்றும் விலையேறப் பெற்ற பொருட்கள், ஆடு, மாடுகளையும் விட்டு வைத்தார்கள். தேவனுக்கு பலியிட ஜனங்கள் இவைகளை விட்டுவைத்தார்கள் என்று சவுல் சொன்னான்.



சாமுவேல் சவுலை பார்த்து சொன்னான், "பலியை பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம். நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்த படியினாலே அவர் உம்மை ராஜாவை இராதபடிக்கு புறக்கணித்து தள்ளினார்," சவுல் தன்னுடைய பாவத்திற்க்காக வருத்தப் பட்டான். ஆனால் அது தாமதமாகயிருந்தது. அவனுடைய வாழ்நாள் முழுவதும் சந்தோஷமில்லாமலிருந்தது. ஏனெனில் அவன் தேவனுக்கு கீழ்ப்படியவில்லை.



# ஒரு அழகான முட்டாள் இராஜா

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

1 சாமுவேல் 8 - 16

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

முற்றும்

18

60

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16